

புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2054 | மே 18, 2023 | புரட்சி 22 | முழக்கம் 18 | விலை: ரூ.3.00

# கலிபோர்னியாவில் ஜாதிக்குத் தடை

*அமெரிக்காவில் சீட்டில் நகரசபையைத் தொடர்ந்து – கலிபோர்னியா மாநிலத்திலும் ஜாதி ஒழிப்புத் தீர்மானம் நிறைவேறியுள்ளது.*

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணம் வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி இருக்கிறது. ஜாதிப் பாகுபாடுகளைத் தடை செய்கிறது அத் தீர்மானம். ஜாதிய நிகழ்வுகள் நடத்துவது அதில் பங்கேற்பது குற்றம் என்கிற தீர்மானம் 34 உறுப்பினர்களின் ஆதரவோடு நிறைவேற்றப்பட்டு இருக்கிறது. இந்த தீர்மானத்திற்கு ஒருவர் மட்டுமே எதிர்ப்பு தெரிவித்திருக் கிறார்.

இதில் குறிப்பிடத்தக்க சிறப்பு என்னவென்றால் இந்த மசோதாவை கலிபோர்னியாவின் செனட் சபையில் கொண்டு வந்தவர் ஆயிஷா மஹால் என்ற இஸ்லாமியப் பெண். கலிபோர்னியா மாகாண சபையில் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் இஸ்லாமிய பெண்ணும் இவர்தான். இவர் ஆப்கான் – அமெரிக்க தம்பதிகளுக்குப் பிறந்தவர். இதற்காக முழு முயற்சிகளில் இறங்கி இந்த மசோதாவை ஒரு மாதத்திற்கு முன்பு அறிமுகப்படுத்தினார். செனட் சபையின் சட்ட ஆலோசனைக் குழு மசோதாவைப் பரிசீலித்து ஒப்புதல் தந்தது.

ஜாதி, தீண்டாமையை எதிர்த்து அமெரிக்காவில் போராடிக் கொண்டிருக்கும் (Equality Lab) சமத்துவ ஆய்வகம் என்ற அமைப்பு இதற்கு உறுதுணையாக இருந்தது. செனட்டைத் தொடர்ந்து இதே போன்ற மசோதா பிரதிநிதிகள் சபையிலும் கொண்டு வரப்பட்டு ஆளுநரின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்படும். அங்கே ஆளுநர்கள் சட்டசபை மாண்பு அறிந்தவர்கள், ‘ஆர்.என். ரவிகள்’ அல்ல; ஒப்புதலை கட்டாயம் வழங்கிடுவார்கள். இதுவரை அமெரிக்காவில் ஜாதி என்பது பாதுகாக்கக்கூடிய ஒரு அம்சமாகத் தான் இருந்து வந்தது.

ஏற்கனவே வாஷிங்டன் மாகாணத்தில் சீட்டில் நகர சபை இப்படி ஒரு தீர்மானத்தை இந்த ஆண்டு தொடக்கத்தில் நிறைவேற்றி இருக்கிறது. அதுபோல மாகாண அளவில் முதல் மாகாணமாக கலிபோர்னியா இப்படி ஒரு சட்டத்தை நிறைவேற்றி இருக்கிறது.




SB403 இச்சட்டத்திற்கு இடப்பட்ட குறியீட்டுப் பெயராகும். அமெரிக்காவில் குடியேறிய பார்ப்பனியம் பல தொழில் நிறுவனங்களில், உயர்கல்வி நிறுவனங்களில் ஜாதியை திணித்துக் கொண்டு வருகிறது. இதை எதிர்த்து சமத்துவ ஆய்வகம் போன்ற இயக்கங்கள் போராடிக் கொண்டிருக்கின்றன. அவர்களின் போராட்டத்திற்கு வெற்றி கிடைத்திருக்கிறது.

ஆனால் இந்தியாவில் இந்துத்துவா பெருமை, சனாதனம் பேசிக் கொண்டிருப்பவர்கள் ஜாதியைப் பற்றி ஒரு வார்த்தை கூட வாய் திறந்து பேசுவது கிடையாது. சமூகத்தையே அழித்துக் கொண்டிருக்கிற இந்த வியாதியைப் பற்றி பேசாமல் சமூக மாற்றம் இங்கு நிகழாது என்பது தான் பெரியாரியல், அம்பேத்கரியலின் அடிப்படையான கோட்பாடு. இவைகளை புறந்தள்ளிவிட்டு இந்து ஒற்றுமை பற்றி பேசிக் கொண்டுள்ளனர், இந்து தர்மம் கடல் தாண்டி போவதே குற்றம் என்கிறது, கடல் தாண்டி போகும் குற்றத்தை செய்துவிட்டு அங்கேயும் இந்து தர்மத்தையும், சனாதனத்தையும் திணித்துக் கொண்டிருக்கும் பார்ப்பனியத்திற்கு கலிபோர்னியா மாகாணம் பலத்த அடி கொடுத்திருக்கிறது.

கலிபோர்னியா மாகாண தீர்மானத்தை நாம் வரவேற்போம்!

# மக்களைக் குழப்பும் போலி அறிவியல்

**ம. கி. எட்வின் பிரபாகரன்**

*பெரியார் இயக்கம் என்பதே ஒரு அறிவியல் இயக்கம் தான். நாம் பேசாத அறிவியல் இல்லை. எனினும் இன்றைய சூழலில், போலி அறிவியலைப் பற்றியும் நாம் பேச வேண்டியுள்ளது.*

*200 ஆண்டுகளுக்கு முந்தைய சமுதாயத்தில், அறிவியல் பேசுபொருளாக இருக்கவில்லை. ஆனால் இன்று அறிவியல் பேசுபொருளாக உள்ளது. இதனால் நேர்மறை விளைவுகளும் உண்டு; எதிர்மறை விளைவுகளும் உண்டு. புதிய விஞ்ஞான கண்டு பிடிப்புகளால் நம் வாழ்க்கைத் தரத்தில் ஏற்படும் மாற்றங்கள் நேர்மறையான விளைவுகளாகும். அதே வேளையில், மக்களிடம் இருக்கும் அறிவியல் சொற்கள் மீதான ஆர்வத்தை பயன்படுத்திக் கொண்டு, அச்சொற்களை வைத்தே பொய்யான தகவல்களை பரப்புவது, எதிர்மறையான விளைவாகும்.*

*இச்சூழ்நிலையே நம்மை போலி அறிவியலைப் பற்றி பேசத் தூண்டுகிறது.*

*போலி அறிவியல் என்றால் என்ன? ஒரு பொய்யான மூடநம்பிக்கை கருத்து, அறிவியல் முலாம் பூசப்பட்டு, உண்மையைப் போல காட்டப்படும் போது, அது போலி அறிவியலாகிறது.* (Pseudoscience). *உதாரணமாக, சனீஸ்வரன் கோயிலை எடுத்துக் கொள்வோம். திருநள்ளாறு சனீஸ்வரன் கோயிலுக்கு மேலே செயற்கைக்கோள் பறக்கும் பொழுது அது ஒரு நிமிடம் செயலிழந்து நின்று விடுவதாக போலி அறிவியல் கருத்து பரப்பப்படுகிறது. இதை ஏன் போலி அறிவியல் என்கிறோமென்றால், பூமியை செயற்கைக்கோள் சுற்றும் அறிவியல் நிகழ்வை, கோயில் நம்பிக்கையோடு கலந்து, விஞ்ஞான உண்மையைப் போல கூறுவதால், இதனை போலி அறிவியல் என்கிறோம்.*

*நிலவுக்கு இந்தியாவில் இருந்து முதன் முதலில் செயற்கைக்கோளை (சந்திராயன்) அனுப்பியவரும், தலைசிறந்த விஞ்ஞானியுமான கோவை மாவட்டத்தைச் சேர்ந்த மயில்சாமி அண்ணாதுரை, இதனை ஆய்வு செய்து பார்க்க எண்ணினார். சக ஆராய்ச்சியாளர்களோடு சோதித்துப் பார்த்ததில் சனீஸ்வரன் கோயிலை தாண்டும் பொழுது செயற்கைக்கோளில் எந்த பாதிப்பும் ஏற்படவில்லை என்பது தெரிந்தது. ஆக, ஆய்வு பூர்வமாக நிரூபிக்க முடிந்தவற்றை மெய்யான அறிவியல் என்றும், நிரூபிக்க முடியாதவற்றை போலி அறிவியல் என்றும் நாம் அறிந்து கொள்ளலாம். அதோடு, அறிவியல் என்பது நம்மை கேள்வி கேட்கத் தூண்டும்; நம் கேள்விகளுக்கு பதில் அளிக்கும்; “நீ கேள்வி கேட்காதே; இது ஆன்மீகத்தோடு தொடர்புடைய அறிவியல்; இதைக் கேள்வி கேட்டால் நீ ஆன்ட்டி இந்தியன்” என்று மெய்யான அறிவியல் கூறாது; போலி அறிவியலே, கேள்விகளை சமாளிக்க மதத்தைக் கேடயமாகப் பயன்படுத்தும்.*

*பழங்காலத்தில் மதக்கருத்துகளைப் பரப்ப நம்பிக்கை மட்டுமே போதுமானதாக இருந்தது. ஆனால் இன்றைய விஞ்ஞான உலகத்திலோ, வெறும் நம்பிக்கையை வைத்து எந்த மதத்தையும் வியாபாரமாக்குவது கடினமாக இருப்பதால், நிகழ்கால அறிவியல் கருத்துகளை மதக் கருத்து களோடு இணைத்து, போலி அறிவியல் கருத்துகளாக பரப்பி வருகின்றனர். பகுத்தறிவாளர்களாகிய நம்மிடமும் கூட நம்மை அறியாமல் சில மூடக் கருத்துகள் இருக்க வாய்ப்புண்டு. நாம் அனைவரும் இந்த சமுதாயத்தின் அங்கம் என்பதால் இந்த சமுதாயத்தில் நிலவும் கருத்துகளின் தாக்கம் நம் மனதிலும் இருக்கலாம். எனவே நம்மை நாமே சுயபரிசோதனை செய்து கொள்வது நன்மை பயக்கும்.*

*நம்மைப் பொறுத்தவரை வானியல்* (Astronomy) *தான் அறிவியல்; ஜோதிடம்* (Astrology) *மூட நம்பிக்கை. ஆனால், மக்களை பொறுத்தவரை இரண்டுமே அறிவியல் தான்! “சூரியனை பூமி சுற்றுகிறது; பூமி நீள்வட்டவுரு வடிவத்தில் உள்ளது” என்று தொலைநோக்கி மூலம் கண்டறிந்து புலப்படுத்தியது வானியல். இதற்கு நேர்மாறாக, பூமி தட்டை எனவும், சூரியன் உலகை சுற்றுகிறது எனவும் சோதிடம் பொய்யுரைக்கிறது. ஒரே நேரத்தில் (ஒரே நாள் நட்சத்திரத்தில்) பிறந்த இரண்டு குழந்தைகளின் வாழ்க்கையும் வெவ்வேறு விதமாகப் போவதைக் கண்கூடாகப் பார்க்கிறோம். எனவே, இரண்டில் எது விஞ்ஞானம் என்பது வெளிப்படை.*

*அந்த காலத்திலேயே மாட்டு வண்டி இருந்தது என்றால், அது முக்கியச் செய்தி ஆகாது; அக்காலத்திலேயே விமானம் இருந்தது என்றால், அது முக்கிய செய்தியாக மாறும். இந்த தந்திரத்தைத் தான் பழமைவாதிகள் கையாண்டு வருகின்றனர். “வைமானிக சாஸ்த்ரா” என்கிற சமஸ்கிருத நூலில், விமானம் தயாரிப்பது எப்படி என்பதற்கான குறிப்புகள் உள்ளதாக மெத்தப் படித்த சனாதனிகள் கூட கதையுரைத்து வந்தனர். இந்நிலையில் நம் நாட்டின் தலைசிறந்த பொறியியல் பல்கலைக்*

*(4ஆம் பக்கம்)*

# பா.ஜ.க. இல்லாத தென்னகம்

கர்நாடக மாநில சட்டப்பேரவைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி அறுதி பெரும்பான்மை பெற்றிருக்கிறது.

பாரதிய ஜனதா கட்சி படுதோல்வி சந்தித்து இருக்கிறது. பாஜக செய்த வெறுப்பு அரசியலை மக்கள் ஆதரிக்க தயாராக இல்லை என்பதையே இந்த தேர்தல் நமக்கு உணர்த்துகிறது.

கர்நாடக மாநிலத்திற்கு என்று சில தனித்த பண்புகள் உண்டு. அதை சமூக நீதி மாநிலமாக மாற்றி அமைத்த பெருமை தேவராஜ் அர்ஸ் என்பவரையே சாரும்.

இந்திரா காந்தி பிரதமராக இருந்தபோது கர்நாடக மாநில முதலமைச்சராக இருந்தவர் தேவராஜ் அர்ஸ். தமிழ்நாட்டில் 69% இட ஒதுக்கீடு வருவதற்கு முன்பே கர்நாடகாவில் 71% இட ஒதுக்கீட்டை அமல்படுத்திய சமூக நீதிப் போராளி அவர். மண்டல் குழு பரிந்துரையை அமல்படுத்த வேண்டும் என்று குரல் கொடுத்தவர் அவர்.

சென்னை சைதாப்பேட்டையில் திராவிடர் கழகம் நடத்திய மண்டல் கமிஷன் இயக்கத்திற்கு ஆதரவான மாநாட்டில் பங்கேற்று உரையாற்றியவர் தேவராஜ் அர்ஸ். சமூக நீதி மாநிலமாகத் திகழ்ந்த கர்நாடகாவில் பிற்காலத்தில் பாஜக காலூன்றி ஜாதிய மதவாத அரசியல் மேலோங்கி சமூகத்தைப் பின்னோக்கி இழுத்துச் சென்றது வேதனையான ஒன்று.

குறிப்பாக பசவராஜ் பொம்மை கர்நாடக முதலமைச்சரானப் பிறகு அங்கு இஸ்லாமிய வெறுப்பு கோரத்தாண்டவம் ஆடியது. ஹிஜாப் பசுவதை தடைச் சட்டம் மதமாற்ற தடைச் சட்டம் ராமநவமி கொண்டாட்டத்தில் ஏற்பட்ட கலவரம், இஸ்லாமியர் இடஒதுக்கீடு இரத்து உள்ளிட்ட அனைத்துப் பிரச்சினைகளிலும் மத வெறியைத் தூண்டிவிட்டு இஸ்லாமியர்களைத் தனிமைப்படுத்தி இந்துக்களை அணி திரட்டும் முயற்சியில் பாஜக ஆட்சி செயல்பட்டது. அந்த முயற்சிகள் எடுபடவில்லை என்பதை இந்த தேர்தல் முடிவுகள் உணர்த்துகிறது.

காங்கிரஸ் இல்லாத இந்தியா என்று மோடி பேசிக் கொண்டிருந்தார். இப்போது பாஜக இல்லாத தென்னிந்தியா உருவாகிவிட்டது. இந்த வெற்றி வருகிற 2024 நாடாளுமன்ற தேர்தலிலும் எதிரொலிக்க வேண்டும். அதிலும் குறிப்பாக பாரதிய ஜனதா கட்சியின் மதவெறி ஆட்சிக்கு முடிவு கட்ட வேண்டும் என்ற பாடத்தை கர்நாடக மக்கள் உணர்த்தியிருக்கிறார்கள்.

# காங்கேயத்தில் நிர்வாண சாமியார்கள்: நடவடிக்கை எடுக்கக் கழகம் கோரிக்கை

காங்கேயம் நகராட்சி அலுவலகத்திற்குள் நிர்வாண சாமி யார்களை அழைத்து வந்து ஆசி வாங்கியது தொடர்பாக ஆணையர், மாநகராட்சி ஊழியர்கள் மீது கடும் நடவடிக்கை விரைந்து எடுக்க வேண்டும் என்று திராவிடர் விடுதலைக் கழகம் ஒருங்கிணைப்பில் தோழமை அமைப்புகளுடன் இணைந்து கழகப் பொருளாளர் துரைசாமி தலைமையில் மே 13, சனிக்கிழமை அன்று திருப்பூர் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளரிடம் புகார் மனு அளிக்கப்பட்டுள்ளது.

புகார் மனுவை பெற்றுக் கொண்ட மாவட்ட காவல்துறை ஆணையாளர் அவர்கள் விசாரணையின் அடிப்படையில் புகார் மனுவின் மீது தக்க நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்துள்ளார்.

இந்நிகழ்வில் மாவட்டத் தலைவர் முகில் ராசு, முகநூல் பொறுப்பாளர் பரிமள ராசன், சங்கீதா, இராமசாமி, மாரிமுத்து, ஆதித்தமிழர் பேரவை அவிநாசி மணி, தமிழ்மாறன், து.தலைவர் கு.ஜானகி, புரட்சிகர இளைஞர் முன்னணி தமிழமுதன், வேலு, மக்கள் பாதுகாப்பு கூட்டமைப்பு கார்மேகம் மற்றும் தோழர்கள் கலந்து கொண்டனர்.

# விடுதலை சிகப்பி மீதான வழக்கைத் திரும்பப் பெற வேண்டும்

கவிஞர் விடுதலை சிகப்பி மீது சென்னை அபிராமபுரம் காவல்துறை பொய் வழக்கு ஒன்றை பதிவு செய்திருக்கிறது. அவர் இந்து கடவுள்களை அவமதித்து விட்டார் என்று பாரத் இந்து முன்னணி என்ற ஒரு அமைப்பு கொடுத்த புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

கவிஞர் விடுதலை சிகப்பி கவிதையில் மலக்குழியில் இறக்கிவிடப்பட்டு அன்றாடம் செத்து ஒழிவதற்கென்றே சில ஜாதிகளை கடவுள் தான் படைத்தார் என சொல்லப்பட்டால் அந்த கடவுள் ஒருநாள் இறங்கி இந்த வாழ்வு எவ்வளவு கொடியது என்பதை நேரடியாக உணரட்டும் என்ற ஆவேசத்துடன் அவர் எழுதிய கவிதை.

தன்னுடைய கற்பனை சிந்தனைத் திறனை இராமன், இலட்சுமணன் மலக்குழியில் இறங்குவது போல் அவர் சித்தரித்தார். இது இந்து கடவுள்களைப் புண்படுத்திவிட்டது என்று ஓலமிடுகிறார்கள்.

சக மனிதனை ஜாதியின் பெயரால் இழி தொழில் செய்ய வைத்து மனித மலத்தை எடுக்கச் சொல்வதும், மலக்குழியில் இறங்கச் சொல்வதும் எவ்வளவு பெரிய சமூக அவமானம். எவ்வளவு பெரிய புண்படுத்தும் நடவடிக்கை என்பதைப் பற்றி இவர்களுக்கு கவலையில்லை. கடவுளை புண்படுத்தகூடாது என்பதுதான் இவர்களுக்கு கவலையாக இருக்கிறது.

இது கடவுள் படைத்த படைப்பு, கடவுள் படைத்த படைப்பின் படிதான் அவர்கள் செய்கிறார்கள் என்று கூறுவதற்கு பதிலாக அந்த கடவுளையே மலக்குழியில் இறக்கிவிட்டால் எப்படி இருக்கும் என்ற ஒரு கற்பனையில் எழுதப்பட்ட ஒரு கவிதை. இன்றைக்கு பிரதமராக இருக்கிற மோடி கூட மனித மலத்தை மனிதர்களாக எடுப்பவர்கள் கடவுளுக்கு நிகரானவர்கள் என்று ஒருமுறை கூறியுள்ளார்.

கடவுளுக்கு நிகரானவர்கள் கடவுளை அந்த வேலையை செய்ய அழைக்கும் போது ஏன் புண்படுகிறது என்று ஓலமிட வேண்டும். இது குறித்து தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் சில வழக்குகளையும் எடுத்துக்காட்டி இருக்கிறது.

ஆபாசத்தை எப்படி மதிப்பிடுவது? அது படைப்பாளியின் பார்வையில் இருந்து பார்க்க வேண்டும்; அவர் எதைச் சொல்ல வருகிறார் என்பதை உணர வேண்டும்; படைப்பாளியின் தரப்பில் இருந்து அதை பார்த்த பிறகு அதை படிக்கும் வாய்ப்புள்ள ஒவ்வொருவரும், ஒவ்வொரு நிலையிலும் இருந்தும் அதைப் பார்த்து, அதன் பிறகே விருப்பு வெறுப்பற்ற ஒரு முடிவுக்கு வர வேண்டும் என்று, சமரேஷ் போஸ், அமல் மித்ரா 1985 ஆம் ஆண்டு வந்த வழக்கில் நீதிமன்றம் அளித்த தீர்ப்பைச் சுட்டிக்காட்டி இருக்கிறது.

இந்த தீர்ப்பின் அடிப்படையில் தான் இந்துக்களால் வணங்கப்படும் ஆண் பெண் தெய்வங்களை எஃப்.எம். உசேன் தனது ஓவியங்களால் அவமதித்து விட்டார் என்ற குற்றச்சாட்டை நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. அதேபோல் பெருமாள் முருகன் 'மாதொரு பாகன்' நாவல் மீது தொடரப்பட்ட வழக்கிலும் அந்த வழக்கை தள்ளுபடி செய்தது. ஆக ஒரு படைப்பாளியின் கருத்துரிமைக்கு இப்படிப்பட்ட அச்சுறுத்தல் வருதல் என்பது கருத்துரிமையை மீறிய ஒரு அப்பட்டமான செயல். தமிழ்நாடு அரசு தலையிட்டு இந்த வழக்குகளை திரும்ப பெற வேண்டும் என்று நாம் வலியுறுத்திகிறோம்.

கடவுளாகக் கொண்டாடப்படும் இராமன், சூத்திர சம்பூகன் பிராமணர்களை தொழுவதற்கு பதிலாக கடவுளை நேரடியாக தொழுதான் என்பதற்கு அவன் தலையை வெட்டினான். சூத்திரர் களை இப்படி அவமதித்த இராமனுக்காக நாம் என்ன தண்டனை கொடுப்பது என்ற கேள்விக்கு கடவுளை அவமதித்து விட்டதாக, புண்படுத்தி விட்டதாக பதறுகிறவர்கள் பதில் சொல்ல வேண்டும்.

# கொடைக்கானலில் ஆளுநருக்குக் கழகம் கருப்புக் கொடி

தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி கொடைக்கானலுக்கு வருகை தந்ததை ஒட்டி அவருக்கு திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் திண்டுக்கல் மாவட்ட அமைப்பாளர் மருதமூர்த்தி தலைமையில் கருப்புக் கொடி காட்டி எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.


மேலும் தமிழ்நாடு அரசுக்கு எதிராகச் செயல்படுவதையும், சட்ட மசோதாக்களை நிலுவையில் வைத்திருப்பதைக் கண்டித்து முழக்கம் எழுப்பப்பட்டன.

பின்னர் கழகத் தோழர்கள் மருதமூர்த்தி, பெரியார், மாக்சிம் கார்கி, ராஜா, கபாலி, ஆயுதன், வீரா, ஜீவா, துர்க்கைராஜ், சிவா, முருகன் உள்ளிட்டோர் காவல்துறையால் கைது செய்யப்பட்டு மாலையில் விடுக்கப்பட்டனர்.

# இளைஞர்களே, இதுதான் பார்ப்பனியம்!

# சனாதனத்தின் கொடூர வரலாறு

*பிரிட்டிஷ் ஆட்சி காலம் தொடங்கி சுதந்திர இந்தியாவில் சனாதனம் பேசி பார்ப்பனியம் எந்த ஒரு சிறு சமூக மாற்றத்தையும் தடுத்து வந்ததோடு நீதி மன்றங்களிலும் வழக்குத் தொடர்ந்தது. ஆண்டு வாரியாக சனாதனக் கொடுமைகள் அது தொடர்பான வழக்குகள் குறித்து ஒரு சுருக்கமான ஆண்டுகள் வழியான தொகுப்பு. மனோஜ் மிட்டல் எழுதி அண்மையில் வெளிவந்த மிகச்சிறந்த நூலான ஜாதியப் பெருமை (Caste Pride) நூலிலிருந்து:*




**1795 :** உயர் ஜாதியினரிடம் நல்ல பெயர் வாங்கும் நோக்கத்தில் கிழக்கிந்திய கம்பெனி காசி பார்ப்பனர்களுக்கு மட்டும் தூக்கு தண்டனையிலிருந்து விதிவிலக்கு அளித்தது.

**1816 :** கீழ் ஜாதிக்காரர்கள் சிறு குற்றங்கள் செய்தாலும் அவர்களை ஆடு மாடுகள் அடைக்கும் பட்டிகளில் அடைத்து வைக்கும் தண்டனையைக் கிழக்கிந்திய கம்பெனி அறிமுகப்படுத்தியது.

**1829 :** உயர்ஜாதியினரின் கடும் எதிர்ப்பு களையும் மீறி வில்லியம் பெண்ட்டிங் கணவன் இறந்த நெருப்பில் மனைவி தானாக விரும்பி வீழ்ந்தாலும் அல்லது கட்டாயப்படுத்தி நெருப்பில் தள்ளப்பட்டாலும் குற்றம் என்று 'சதி' எனும் கொடுமையை முற்றாக ஒழித்தார்.

**1850 :** ஒதுக்கி வைக்கப்பட்ட கீழ் ஜாதியினராக இருந்தாலும் அனைத்து இந்துக்களுக்கும் பரம்பரை சொத்தில் உரிமை உண்டு என்று லார்டு டல்ஹவுசி முதன் முதலாக ஒரு சட்டம் கொண்டு வந்தார். ஜாதித் தடைகளை எதிர்த்து இந்திய அளவில் கொண்டுவரப்பட்ட முதல் சட்டம் இதுதான்.

**1855 :** சத்திரியர்கள் அனைவரையும் அவதாரம் எடுத்து வந்த பரசுராமன் அழித்து விட்டதால் சத்திரிய வம்சமே இல்லை; எனவே ராஜபுத்திரர்கள் சத்திரியர் என்று உரிமை கோர முடியாது; அவர்கள் சூத்திரர்கள் என்ற பார்ப்பன வாதங்களை லண்டன் பிரிவி கவுன்சில் ஏற்க மறுத்து, ராஜ் புத்திரர்கள் சத்திரியர் உரிமை கோரலாம் என்று தீர்ப்பளித்தது.

**1858 :** கீழ் ஜாதிப் பெண்கள் ரவிக்கை அணியக் கூடாது என்ற பார்ப்பனியம் விதித்தத் தடையை நீக்கி திருவிதாங்கூர் சமஸ்தான திவான் டி. மாதவராவ், ரவிக்கை அணியும் உரிமையை வழங்கினார்.

**1859 :** பிறகு அன்றைய பிரிட்டிஷ் ஆட்சி தந்த அழுத்தத்தின் காரணமாக, மேல் ஜாதிப் பெண்கள் அணியும் ரவிக்கையைப் போல் அணியக் கூடாது; குப்பாயம் அணிந்து மார்பை பொதுவெளியில் மறைத்துக் கொள்ளலாம் என்று திவான் மாதவ ராவ் அறிவித்தார்.

**1862 :** வில்லியம் பெண்டிங் சதியை சட்டப்படி ஒழித்த பிறகும் பார்ப்பனர்கள், உயர்ஜாதினர் கடும் எதிர்ப்பு தெரிவித்ததால் அவர்களைத் திருப்திப்படுத்த விரும்பிய பிரிட்டிஷ் ஆட்சி சதி – தற்கொலைக்கான முயற்சி கொலை அல்ல என்று சட்டத்தைத் திருத்தியது.

**1890 :** மராட்டியப் பகுதிகளில் ஒவ்வொரு கிராமத்துக்கும் பரம்பரை புரோகிதர்களை நியமித்துக் கொண்டார்கள். அவர்கள் மட்டுமே திருமணம் உள்ளிட்ட சடங்குகளை நடத்த முடியும் என்ற கட்டாயம் இருந்தது. வேறு புரோகிதர் ஒருவர் திருமணம் நடத்த 'தட்சணை' வாங்கியதை எதிர்த்து பரம்பரை புரோகிதர் ஒருவர் நீதிமன்றம் சென்றார். 20 ஆண்டு காலத்துக்கு மேல் நீதிமன்றங்கள் இந்த வழக்கைச் சந்தித்தது. ஆதரவாகவும் எதிராக வும் தீர்ப்புகளை வழங்கினர். ஜோதி ராவ் புலேயின் 'சத்திய சோதக்' அமைப்பு "பிராமண" புரோகித திருமண முறையை மறுத்து அந்தந்த ஜாதியினரே திருமணத்தை நடத்தும் முறையை வலியுறுத்தியது. இதை எதிர்த்தும் நீதிமன்றம் போனது – வைதீகக் கூட்டம். லண்டன் பிரிவி கவுன்சில் உள்ளூர் பரம்பரை அர்ச்சகர்களை வைத்துத்தான் திருமணங்களை நடத்த வேண்டும் என்பது கட்டாயமில்லை என்று தீர்ப்பு வழங்கியது.

**1890 :** காயஸ்தா என்ற ஜாதிப் பிரிவினர் சத்திரியர்அல்ல சூத்திரர்களே என்று கல்கத்தா உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. அதே நேரத்தில் அலகாபாத் உயர்நீதிமன்றம் அவர்கள் சத்திரியர் உரிமை கோரலாம் என்று தீர்ப்பளித்தது.

**1898 :** சத்திரியர் என்ற வம்சமே இல்லை என்று வாதிட்ட "பிராமணர்கள்" வைசியர்களும் இல்லை; அனைவரும் "சூத்திரர்களே" என்று முன்வைத்த வாதத்தை பம்பாய் உயர்நீதிமன்ற நீதிபதி எம்.ஜி. ராணடே ஏற்க மறுத்து, மனுவைத் தள்ளுபடி செய்தார்.

**1908 :** சூத்திரர் – பஞ்சமர் கோயில் நுழைவுக்கு சனாதனம் அனுமதி மறுத்தது. அதற்காகவே கோபுரங்களைக் கட்டி வீதியில் இருந்தே வணங்கும் முறையைத் திணித்தது. ஆலய பிரவேச இயக்கம் நடந்தபோது பார்ப்பனியம் அதை எதிர்த்து, சான்றாக ஆகமங்களைக் காட்டியது. வழக்கு லண்டன் பிரிவி கவுன்சிலுக்குச் சென்றது. பிரிவி கவுன்சில் கோயிலில் வழமையாகப் பின்பற்றப்படும் சம்பிரதாயங்களை மீறும் உரிமை, கோயில் அறங்காவலர்களுக்குக் கிடையாது என்று தீர்ப்பளித்தது. அனைத்து இந்துக்களுக்கும் கோயிலுக்குள் செல்லும் உரிமையே தடுக்கப்பட்டது

**1913 :** 1824ஆம் ஆண்டிலேயே 'சதி' எனும் கொடுமை தடை செய்யப்பட்டாலும் 80 ஆண்டுகளுக்குப் பிறகு ஜவகர்லால் நேருவின் தந்தை மோதிலால் நேரு, ஒரு வழக்கறிஞராக சதியை அரங்கேற்றிய 8 பிராமணர்களுக்கு ஆதரவாக அலகாபாத் உயர்நீதிமன்றத்தில் வாதாடினார். கணவன் இறந்த உடலில் மனைவி போய் உட்கார்ந்த உடனேயே அதிசயமாக ஒரு நெருப்பு தானாக உருவானது; அது கடவுள் செயல்; எனவே நெருப்பை யாரும் உண்டாக்கவில்லை என்று வாதிட்டார். அலகாபாத் உயர்நீதிமன்றம் இதை ஏற்க மறுத்து குற்றத்தை உறுதிப்படுத்தியது.

**1916 :** தீண்டாமைக்கு உட்படுத்தப்பட்ட மக்கள் சந்திக்கும் கொடுமைகள் பற்றி தொடர்ந்து 'கள்ள மவுனமே' நீடித்தது. எவரும் வாய் திறக்கவில்லை; முதன்முதலாக டெல்லி மேலவையில் (Imperial Legislative Council) மேனக்ஜி தாதாபாய் என்பவர் தான் இந்த மவுனத்தை உடைத்தார். தீண்டாமையால் பாதிக்கப்படும் மக்களுக்கு உரிய நிவாரணம் தேவை என்று வலியுறுத்தினார்.

**1918 :** முதன்முதலாக இந்து மதத்துக்குள் வெவ்வேறு ஜாதியினர் ஜாதி கலப்பு திருமணம் செய்து கொள்ள வழிவகுக்கும் மசோதாவை விதல் பாய் பட்டேல் தான் அறிமுகப்படுத்தினார்.

**1919 :** நூறு ஆண்டுகளுக்கு மேலாக சிறு குற்றங்கள் செய்யும் கீழ் ஜாதிக்காரர்களை ஆடு மாடுகள் அடைத்து வைக்கும் பட்டிகளில் அடைக்கும் கொடுமை நிலவியது. இந்த ஆண்டுதான் அந்த கொடூரச் சட்டம் அகற்றப்பட்டது.

**1919 :** இந்தியாவில் தீண்டப்படாத பிரிவிலிருந்து முதல் சட்டமன்ற உறுப்பினராகியது எம்.சி. ராஜா. அதுவும் சென்னை மாகாணத்தில் தான் நடந்தது. அவர் ஆளுநருடன் கலந்து பேசி தீண்டப்படாத மக்கள் பொதுக் குளம், கிணறு, சாலைகளைப் பயன்படுத்தும் உரிமைகளுக்கான தேவையை வலியுறுத்தினார்.

**1920 :** நாக்பூரில் கூடிய அகில இந்திய காங்கிரஸ், இந்து சமூகத்தில் பார்ப்பனர் – பார்ப்பனரல்லாதார் இடையே உள்ள முரண்பாடுகள் தீர்க்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியது. இந்து மதத்தை தீண்டாமை யிலிருந்து விடுவிக்க சிறப்புத் திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியது. நாக்பூர் காங்கிரஸ் காந்தியின் செல்வாக்கு கட்டுப்பாட்டின் கீழ் நடந்தது. அதற்கு முன் நடந்த காங்கிரஸ் மாநாடுகளில் பச்சையாக வர்ணாசிரமம் பின்பற்றப்பட்டது.

**1921 :** மாண்டேகு சேம்ஸ் போர்ட் சீர்திருத்தத்தின்படி தேர்தலில் போட்டியிட்ட தீண்டப்படாத மக்களுக்கு தனித் தொகுதி ஒதுக்கீட்டை பிரிட்டிஷ் ஆட்சி அமல்படுத்தியது.

**1922 :** தீண்டப்படாத மக்களுக்கு தனிக் கிணறுகளை அமைப்பது என்றும் அதற்கு காங்கிரஸ் கட்சி நிதியை செலவிடுவது என்றும் காங்கிரஸ் செயற்குழு முடிவு செய்தது.

**1923 :** பம்பாய் மாகாண சட்டசபையில் எஸ்.கே. போலே என்பவர் ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். அதன்படி தீண்டப்படாத மக்கள் பொது இடங்களில் நடக்கவும் பொதுக் கிணற்றில் தண்ணீர் எடுக்கவும் அனுமதி வழங்கப்பட்டது.

**1924 :** இதே போல் ஒரு தீர்மானத்தை சென்னை மாகாண சட்ட சபையில் ஆர். சீனிவாசன் என்ற உறுப்பினர் கொண்டு வந்தார். இதற்கு பாலக்காடு "பிராமணர்கள்" கடும் எதிர்ப்பு தெரிவித்து வன்முறையில் இறங்கினர். மலபார் பகுதியில் கல்பாத்தி அக்ரகாரத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் கோயில் திருவிழாக் காலங்களில் தீண்டப்படாதவர்கள் நடமாடுவதாகக் குற்றம் சாட்டினர்.

**1926 :** சென்னை மாகாண சட்ட சபையில் ஆர். வீரையன் ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானத்தைக் கொண்டு வந்தார். தீண்டாமைக்கு எதிராக இந்தியாவிலேயே முதன்முதலாக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் இதுதான். அதுவும்கூட உள்ளாட்சி சட்டங்களில் ஒரு திருத்தத்தின் வழியாகவே கொண்டுவர முடிந்தது. வைதீகப் பார்ப்பனியம் கடுமையாக எதிர்த்தது. வைஸ்ராய் இர்வின் இதில் மிகவும் கவனம் செலுத்தி, ஆளுநர் கோஷன் அவர்களிடம் இதை ஏற்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தினார்; தீர்மானம் நிறைவேறியது.

**தமிழில் : ராசேந்திரன்**

(தொடரும்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/22-24 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/22-24
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# ‘வைமானிகா’ சாஸ்திரப்படி விமானம் தயாரிப்பா?

(முதல் பக்கத் தொடர்ச்சி)

கழகமான “இந்திய அறிவியல் நிறுவனத்தில் (Indian Institute of Science)” வைமானிகா சாஸ்திரத்தில் சொன்னபடி விமானம் தயாரித்துப் பார்த்தனர் (1975). விமானம் பறக்கவேயில்லை. ஏனென்றால், சாஸ்திரத்தில் இருக்கும் சில குறிப்புகள், அடிப்படை இயற்பியல் விதிகளுக்கே எதிராக இருந்துள்ளன.

COVID காலத்தில், அப்படி ஒரு கிருமியே இல்லை என்று சாதித்து வந்தனர். இந்த கருத்து எதிர்ப்பார்த்த அளவுக்கு போணியாகாததால், காலப்போக்கில் “இலுமினாட்டி என்ற ரகசிய குழு தான் கிருமியை அனுப்பி உயிர்களை கொல்கிறது” என்று சீமான், பாரிசாலன் போன்ற கதாசிரியர்கள் விதவிதமாக வதந்திகளை பரப்பினர். பிரெஞ்சு புரட்சியின் போது, அரசிடம் இருந்து உயிரை காப்பாற்றிக் கொள்ள, கம்யூனிஸ்ட்கள் ரகசிய குழுக்களாக செயல்பட்டனர். அவர்களே “இலுமினாட்டிகள்” எனப்பட்டனர். அந்த இலுமினாட்டி என்ற சொல்லை 18ஆம் நூற்றாண்டிலிருந்து திருடி, 21ஆம் நூற்றாண்டுக்கு எடுத்து வந்து, ஏதோ 13 முதலாளித்துவ குடும்பங்கள் தான் உலகையே கட்டுப்பாட்டில் வைத்திருப்ப தாகவும், அவர்கள் தான் இலுமினாட்டிகள் என்றும் கட்டுக்கதைகளை இன்றுவரை பரப்பி வருகின்றனர். (உலக மக்கள் மீது கிருமிகளை ஏவினால், அது ஏவியவர்களை தாக்காதா? என்கிற சிந்தனையே இல்லாமல்)

முகக்கவசம் அணிவதால், சுவாசக் கோளாறு ஏற்படும் என்று வதந்தி பரப்பினார்கள். யாரும் 24 மணிநேரமும் முகக்கவசம் அணிந்துகொண்டு இருப்பதில்லை. ஏற்கனவே எந்த கோளாறும் இல்லாதவர்களுக்கு புதிதாக எந்த கோளாறும் முகக்கவசத்தால் உருவாகாது என்று பல ஆய்வு முடிவுகளும் கூறுகின்றன. (எ-கா: 2020 அக்டோபர் National Institute of Health ஆய்வு). எந்த ஆய்வையும் செய்யாதவர்கள், வதந்தி பரப்புவதற்கு மட்டும் கூச்சப்படுவதேயில்லை. தடுப்பூசி மருந்தில் ஒரு எலக்ட்ரானிக் சிப் உள்ளதாகவும், தடுப்பூசி போடப்பட்டவர்களை கண்காணிப்பதற்கு அது பயன்படும் என்றும் போலி அறிவியல் கருத்துகள் பரப்பப்பட்டன. ஊசிமுனை எவ்வளவு மெலிதானது? அதற்குள் ஒரு எலக்ட்ரானிக் சிப்பை நுழைக்க முடியுமா? உலகின் 800 கோடி மக்களையும் கண்காணிக்க வேண்டுமென்றால் எத்தனை பேரை வேலைக்கு அமர்த்த வேண்டும்? யாரோ 13 இலுமினாட்டி குடும்பங்களுக்கு இதுதான் வேலையா? நடைமுறையில் இதெல்லாம் சாத்தியமா?

நடிகர் விவேக் இறந்த போது, இந்தியாவில் 12 கோடி பேருக்கு தடுப்பூசி போடப்பட்டிருந்தது. தடுப்பூசி போட்ட சில நாட்களுக்குள் இறந்தவர்கள் 180 பேர். விவேக்கையும் சேர்த்து 181. அதாவது தடுப்பூசி போட்டுக் கொண்டவர்களில் இறந்தவர்கள் 0.00015% பேர். அதாவது, 20 லட்சம் பேர் தடுப்பூசி போட்டுக் கொண்டால், அதில் 3 பேர் இறக்கின்றனர். அந்த 3 பேரும் தடுப்பூசியால் தான் இறக்கின்றனர் என்று நிரூபிக்கப்படவில்லை. அவர்கள் தடுப்பூசியால் தான் இறக்கின்றனர் என்று ஒரு பேச்சுக்கு வைத்துக் கொள்வோம். அப்படிப் பார்த்தாலும் தடுப்பூசி போட்டவர்களில் 99.999% பேருக்கு மேல் நலமாக உள்ள போது, இதை முழுமையான தோல்வி என்று எப்படி சொல்ல முடியும்?

180 உயிரிழப்பை சுழியம் ஆக்குவதை நோக்கி ஆராய்ச்சிகள் நகர்ந்தால் போதுமல்லவா!! நாம் அனைவரும் காய்ச்சலுக்கு உட்கொள்ளும் paracetamol மாத்திரையைத் தின்று உயிரிழந்தவர்களும் உண்டு. எந்த ஒரு மருந்தும் 100% அனைவருக்கும் ஒத்துக்கொள்ளும் என்று கூறிவிடவே முடியாது.

WhatsApp forward செய்திகளாக வரும் மருத்துவத் தகவல்களும் நம்பகத் தன்மையற்றவை தான். அதிசயப் பழம், அபூர்வ மூலிகை என்றெல்லாம் வரும் விளம்பரங்கள் பெரும்பாலும் மோசடியானதாகவே இருக்கின்றன. டெங்கு காய்ச்சலின் போது, சில பாரம்பரிய மருத்துவர்கள் பப்பாளி இலையை பரிந்துரைத்தனர். அதனை ஆய்வுக்கூடத்தில் வைத்து சோதித்துப் பார்த்தபோது, அது இரத்தத்தட்டுகளின் (Platelets) எண்ணிக்கையை அதிகரிப்பதை கண்டுபிடித்தனர். இதன் விளைவாக பல நவீன மருந்து நிறுவனங்கள் தாமாக முன்வந்து பப்பாளி இலை மாத்திரைகளை சந்தைப்படுத்தின. இவ்வாறாக ஒரு பழமோ இலையோ கீரையோ மருத்துவ குணம்மிக்கதாக இருந்தால், அது ஆய்வுக்குப் பின் தானாகவே மருந்து நிறுவனங்களின் உற்பத்திப் பொருளாக மாறிவிடும். அப்படி மாறாத ஏதோ ஒன்று, ரகசிய மூலிகை, அதிசயக் கனி என்று விளம்பரப்படுத்தப்பட்டால், அது பெரும்பாலும் ஏமாற்றுவேலையாக இருக்கவே வாய்ப்புகள் அதிகம்.

அதேபோல, சிசேரியன் பிரசவ முறை பற்றிய தேவையற்ற அச்சங்களும் மக்கள் மனத்தில் உள்ளன. இயற்கையான வலிமிகுந்த பிரசவ முறைக்கு “சுகப்” பிரசவம் என்று பெயர் வைத்தது யாரென்று தெரியவில்லை. இந்த இயற்கையான முறையில் குழந்தை பிறந்தால், அது குழந்தையின் ஆரோக்கியத்திற்கு பேருதவியாக இருக்கும் தான். ஆனால் இந்த சுகப்பிரசவம் நடைபெறுவதில் சிக்கல் ஏற்படும் போது, தாயின் உயிரையும் குழந்தையின் உயிரையும் காப்பாற்ற சிசேரியன் அறுவை சிகிச்சை அவசியமாகிறது. வேண்டுமென்றே பணத்துக்காக மருத்துவர்கள் இதைச் செய்வதாக பரவலாக ஒரு தவறான நம்பிக்கை சமூகத்தில் நிலவுகிறது. எல்லா துறைகளிலும் பணத்துக்காக நெறிதவறி நடப்பவர்கள் இருப்பதைப் போலவே மருத்துவத்துறையிலும் அவ்வாறு ஒரு சிலர் இருக்கலாம். ஆனால் இதை பொதுமைப்படுத்த முடியாது. சிசேரியனால் காப்பாற்றப்பட்ட உயிர்கள் ஏராளம். 20 ஆண்டுகளுக்கு முன்பு, இந்தியாவில் 3 லட்சம் பிரசவங்களுக்கு 3000 மரணங்கள் நிகழ்ந்து வந்தன. சிசேரியன் பரவலாக மாறியபின், இன்றைய தேதியில் அதே 3 லட்சம் பிரசவங்களுக்கு 130 மரணங்கள் நிகழ்கின்றன. இறப்பு விகிதம் 30 மடங்கு குறைந்துள்ளதை காண முடிகிறது. எனவே, உயிர் காக்கும் சிசேரியன் முறையை கண்மூடித்தனமாக எதிர்ப்பது தேவையற்றதாகும். சிலர் சிசேரியன் பற்றிய மூடநம்பிக்கைகளால் பயந்துபோய், YouTube பார்த்து வீட்டிலேயே பிரசவம் செய்ய முயற்சிக்கின்றனர். சமீப காலங்களில் இதனால் உயிரிழப்புகளும் நடந்துள்ளன. புகைப்படக்கருவி வந்தபோது, மக்கள் அதனை அபசகுனமாகப் பார்த்தனர். ஆனால் இன்று அனைவரும் புகைப்படம் எடுத்துக் கொள்கிறோம். எந்த ஒரு அறிவியல் கண்டுபிடிப்புமே முதலில் எதிர்க்கப்படும்; பின்பு முழுமனதாக ஏற்கப்படும்!

குடிமுறைப் பொறியியல் (Civil Engineering), கட்டிடக்கலை (Architecture) ஆகியவை அறிவியலின் பிரிவுகளாகும். வாஸ்து சாஸ்திரம் என்பது போலி அறிவியல் ஆகும். கணிதம் (Mathematics) அறிவியலாகும். ஆனால் பெயரின் எழுத்துகளை மாற்றினால் வாழ்க்கையே மாறிவிடும் என்று பிதற்றும் எண்கணிதம் (Numerology) ஒரு போலி அறிவியலாகும். இது போல் இன்னும் ஆயிரக்கணக்கான அறிவியல் எள போலி அறிவியல் உதாரணங்களைச் சுட்டிக்காட்ட முடியும். பகுத்தறிவு இயக்கத்தில் இருக்கும் நமக்கு, எது அறிவியல்? எது போலி அறிவியல்? என்கிற வேறுபாடு தெரிந்தால் தான், நாம் மக்களை தெளிவு பெறச் செய்ய முடியும். எனவே, நாம் தெளிவோம்! பிறரையும் தெளிவுறச் செய்வோம்!

**(சேலம் கழக மாநில மாநாட்டில் ஆற்றிய உரை)**

# சேலம் மாவட்டக் கலந்துரையாடல் : கழகத் தலைவர் தலைமையில் நடந்தது

சேலம் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகக் கலந்துரையாடல் கூட்டம், 11.05.2023 வியாழன் காலை 11.00 மணியளவில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் மேட்டூர் தாய்த் தமிழ் தொடக்கப் பள்ளியில் நடைபெற்றது.

கலந்துரையாடல் கூட்டத்தில் சேலத்தில் நடைபெற்ற இரண்டு நாள் மாநில மாநாடு குறித்து விவாதிக்கப்பட்டது. சேலம் கிழக்கு மாவட்ட செயலாளர் டேவிட் மாநாட்டு வரவு செலவு கணக்குகளை தெரிவித்தார். அவரைத் தொடர்ந்து சேலம் மேற்கு மாவட்டத் தலைவர் சூரியகுமார், தலைமைக் குழு உறுப்பினர் சக்திவேல், மேற்கு மாவட்ட செயலாளர் சி.கோவிந்தராஜ் ஆகியோர் மாநாடு குறித்தும், மாநாட்டிற்காக உழைத்த தோழர்களைப் பற்றியும், தோழர்கள் ஒவ்வொருவரின் உழைப்பும் இந்த மாநாடு சிறக்க உதவியாக இருந்தது என்று தமது உரையில் குறிப்பிட்டனர்.

அதன் பிறகு மாவட்டத்தில் இருந்து வந்திருந்த மாவட்ட அமைப்பாளர்கள், மாநகர, நகர, ஒன்றிய, கிளைக் கழக பொறுப்பாளர்களும், தோழர்களும், மாநாடு குறித்தும் மாநாட்டிற்காக தங்கள் பகுதியில் திரட்டிய நன்கொடை மற்றும் செலவு விவரங்களை எடுத்து கூறினார்கள்.

நிறைவாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி பேசுகையில், “மாநாடு மற்றும் பேரணிக் குறித்தும் மாநாட்டு அரங்க நிகழ்வில் போடப்பட்ட ஆவணப் படங்கள் தோழர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் ஒரு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்றும், ஆவணப்படத்தை தயார் செய்த பிரகாசு, இளவரசன், விஜி ஆகியோருக்கு பாராட்டுகளையும், நன்றியினையும் தெரிவித்தார்.”

மேலும் “மாநாடு முடிந்தவுடன் நமது வேலை முடிந்து விடவில்லை இனி தொடர்ந்து தெருமுனைக் கூட்டங்களை நடத்த வேண்டும்” என்றும் தமது உரையில் குறிப்பிட்டார்.

மாநாடு சுவரெழுத்துப் பணிகளை சேலம் மாவட்டம் முழுவதும் செய்த குமரப்பா மற்றும் அண்ணாதுரை ஆகியோருக்கு கழகத் தலைவர் நினைவு கேடயங்களை வழங்கினார்.

நிறைவாக சூரியகுமார் நன்றி கூற கலந்துரையாடல் கூட்டம் நிறைவடைந்தது. அனைவருக்கும் அசைவ விருந்து அளிக்கப்பட்டது.

## சேலத்தில் கழகச் செயலவைக் கூடுகிறது!

சேலத்தில் எதிர்வரும் மே 21, 2023 காலை 10 மணியளவில் கழகச் செயலவைக் கூடுகிறது.

**பொருள் :** மாநாடு பற்றிய ஆய்வு, எதிர்காலச் செயல் திட்டங்கள் மற்றும் மாநாடு வரவு செலவுகள் ஒப்படைத்தல்.

செயலவை உறுப்பினர்கள் தவறாது கலந்துக் கொள்ள வேண்டுகிறோம்.

**இடம் :** ஜி.பி. ஹால், 52C/1, பென்சன் லைன் ரோடு, குகை ஆண்கள் உயர்நிலைப் பள்ளி அருகில், சேலம்,

கொளத்தூர் மணி, தலைவர்
விடுதலை இராசேந்திரன், பொதுச் செயலாளர்

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 18th May 2023

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN